உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 **April 1942** **No. 4**

விஷய சூசிகை. பக்கம்

ஓர் குறிப்பு	1
வைத்தியம் (மதுக்கூர் Dr. K. ஷாமோடி ஆவர்கள்)	1—3
ஹிருதயரோகங்கள் (பத்திராதிபர்)	3—8
ஒளஷதசாரம் (பண்டிட் நாராயணய்யங்கார்)	92-99
பலவகை / - ஷை	29-36
திருச்சி ஆயுர்வேத ஸபா	
மதுரை சுதேச வைத்திய ஸபா	

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4.
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No. 2, Police Station West Lane, Madura.

[விலை **0—3—0**

குறிப்பு,

1. சந்திரிகையில் வெளியிடும்படி நமக்குவரும் வியாசங்கள் காலதாமதமின்றி உடனுக்குடன் வெளியிடப்படும். அவ்விதம் வெளிவராத வியாசங்கள் நமக்குக் கிடைக்கவில்லையென்றே நிருபர்கள் கருதவேண்டும். பத்திரிகைகட்கு வியாசம் எழுதுவதில் நமது வைத்தியர்களுக்குப் பொதுவாக ஓர் அச்சம் இருப்பதை கவனிக்கிறோம். ஆகவே அபூர்வமாக நமக்குக் கிடைக்கும் வியாசங்களைத் தாமதமின்றி உடனேயே வெளியிடவேண்டுமென்பது நமது நோக்கம். ஆகவே வெளிவராத வியாசங்கள் ஏதோ காரணத்தால் நமக்குக் கிடைக்கவில்லையென்று கருதவேண்டும். நாம் அறிந்த காரணம் ஒன்றைக்குறிப்பிடுகிறோம். அதாவது வியாசம் அனுப்புபவர்கள் கடிதத்தின் இடையைக் கவனித்து தபால்தலை ஒட்டாமல் குறைத்து ஒட்டி விடுவதால் அது நமக்கு வரும்பொழுது குறைவு தொகையைக் கட்டிப் பெற்றுக்கொள்ள நேரிடுகின்றது. அந்தக்கடிதங்களை நாம் பெற்றுக்கொள்ளாமல் வாபஸ் செய்துவிடுவதால் அதைப்பற்றிய தகவல் நமக்குத் தெரியாமல் போகின்றது. ஆகவே தயவுசெய்து தபால் தலைகளைக் குறைவின்றி ஒட்டிச் சரிபார்த்து கடிதங்களை அனுப்பும்படி வேண்டுகிறோம்.

2. நண்பர்கள் சில குறிப்பிட்ட மருந்துகளின் முறைகளையறியவிரும்பி நமக்குக் கடிதம் எழுதுகின்றனர். அவர்களுக்குத் தனியாகக் கடிதம்மூலம் விவரங்களை எழுதியனுப்புவது கடினமென்று கருதி அம்முறைகளை சந்திரிகைமூலமாகவே இதுவரையில் வெளியிட்டுவருகிறோம். இம்முறைகளை "பலவகை" என்ற தலைப்பில் வெளியிடுகிறோம். ஆகவே நண்பர்கள் தாங்கள் விரும்பும் முறைகளை அத்தலைப்பில் கவனித்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம். தவிர சிலர் நூல்களைக் குறிக்காமல் முறைகளை எழுதுகின்றனர். நூல்களைக் குறிப்பிட முடியுமாகில் குறிப்பிட்டு வேண்டும் முறைகளின் பெயரை எழுதினால் அது மிகவும் சௌகரியமாக இருக்கும்.

3, சென்ற சில மாதங்களாக சந்திரிகையில் வெளிவராமலிருந்த "ஔஷதஸாரம்" என்றபாகத்தை இந்தச்சந்திரிகைமுதலாக வெளியிடுகிறோம் .91 பக்கங்கள் இதற்குமுந்தி வெளிவந்திருப்பதால் அதையொட்டி 92வது பக்கம் முதல் இச்சந்திரிகையில் துடங்கப்படுகின்றது.

பத்திராதிபர்

வைத்தியம் (மதுக்கூர் [redacted] K. [redacted]

(நவம்பர் மாதத்தொடர்ச்சி)

மதுரரஸம்—(இனிப்பு) பஞ்சபூதஜந்யமான வஸ்துக்களில் பூமி ஜலகுணப்பெருக்குகளினால் இச்சுவை ஏற்படுகின்றது. ஸமான குணங்களான குருத்வ ஸ்னிக்தத்வாதிகளு மிங்குள்ளன. வைத்ய குணமுடையதாக விருப்பதால் சாம்யகுணத்தைப் பெற்ற கபம் இதனால் அதிகரிக்கிறது. விபரீதத்தால் வாதபித்தங்கள் ஹீனத் தன்மையை யடைகின்றன. இச்சுவையில் Hydrogen 2 பாகங்களும் Oxygen 1 பங்கும் Carbon பாகங்களும் இருக்கின்றனவென்று விக்ஞான வாதிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர். இதன் வாஸ்தவத்தை முன்னோர்களிலேயே கண்டறிந்து நம்மாசாரியர்கள் "பூஜலகுணப்பெருக்கினாலினிப்பு" என்று நமக்குபதேசித்துள்ளார்கள். (2) அம்லரஸம் (புளிப்பு) பூ தேஜோகுண மிகுதியால் இச்சுவை யேற்படுவதாக முன்னோர்கள் போதித்துள்ளார்கள். பூகுணங்களினால் கபவிருத்தியையும் அக்னி குணங்களினால் பித்த விருத்தியையுமுண்டுபண்ணுகிறது. விபரீத குணங்களினால் வாதஹரமாகின்றது. ஆக்னேயமாகையால் உஷ்ண தீக்ஷ்ணாதிகளும் பார்த்திவமாகையால் குருத்வாதிகளும் இதிலுண்டு. நவீன ஆராய்ச்சியில் இதில் Oxygen அதிக பாகங்களும் Nitrogen Carbon பாகங்களுமிருப்பதாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். (3) லவணரஸம் (உப்பு) ஜலதேஜோகுணப் பெருக்கினால் இச்சுவை யுண்டாவதாய்க் கூறப்படுவதை யொட்டி தேஜோகுணங்களினால் உஷ்ண தீக்ஷ்ண தாஹாதிகளும், ஜலகுணத்தால் திரவத்தன்மையும் இதிலிருப்பதால் சமான குணமுடைய பித்த கபங்கள் பெருகுகின்றன. விபரீதத்தால் வாதம் குறைகிறது. இச்சுவையின் பூர்ணமான அவயவக்ஞானம் விக்ஞர்களுக்கு இன்னும் ஏற்படாததால் இங்கு குறிப்பிடவில்லை. (4) கடுரஸம்—(காரம்) வாயுதேஜோகுணங்களினால் இச்சுவை ஏற்படுகிறதாகக் கூறப்பட்டிருக்கிறது. தன்னிமித்தம் இதில் தீபன, பாசன, லகு, உஷ்ண, தீக்ஷ்ணாதி குணங்களிருப்பதால் விபரீதமான கபம் குறைகின்றது. ஸாம்யத்தன்மையினால் வாத பித்தங்கள் வளருகின்றன. நவீன ஆராய்ச்சியில் இதன் அறிவு ஏற்படாததால் விவரமும் கிடையாது. (5) திக்தரஸம் (கசப்பு)

இச்சுவை ஆகா[illegible]களின் குணப்பெருக்கினா லுண்டாவதாய்க் கருதப்பட்டது காரணமாய் லகு, சீத, ரூக்ஷ, தீபன, பாசனாதி குணங்களின் மிகுதியால் ஸமான குணமுடைய வாதம் வலுக்கக் காரணமாகிறது. விபரீத குணமுடையதா யிருப்பதால் பித்த கபங்கள் குறைகின்றன. நூதன ஆராய்ச்சியில் இதில் Nitrogen 77 பாகங்களும், Aether பாகங்களுமமைந்திருக்கின்றதாய் கண்டறிந்துள்ளார்கள். (6) கஷாயரஸம்—(துவர்ப்பு) இச்சுவைபூவாயுகுணங்களினால் ஏற்படுவதாயிருக்கிறது. ரூக்ஷ,சீதாதித் தன்மையிருப்பதால் விபரீதத்தால் பித்த கபஹரமாகவும் ஸாம்யதையினால் வாதகரமுமாகின்றது. இதில் Carbon 11 பங்குகளும் Hydrogen, Oxygen கள் 9 பங்சகளுமிருப்பதாய் நவீனர்கள் கூறுகின்றனர். அவைகளின் ஆராய்ச்சியில் Oxygen and Hydrogen களை காரணங்களாய் கூறியிருப்பதும் இவ்விரு வஸ்துக்களின் சேர்க்கையினால் ஸ்தூல ஜலமுண்டாகிறதென்ற வாஸ்தவத்தை முன் கூட்டிக்கண்டறிந்து "ஆப்யோரஸ" (ரஸம் ஜலசம்பந்தமே) என்று முன்னோர்கள் விளக்கி இதர ரஸச்சேர்க்கைகளினால் வெவ்வேறு சுவைகளுண்டாகின்றனவென்று முதியோர் வாக்யத்தின் இரகஸ்யத்தைவெளிப்படுத்தி யிருக்கின்றனர். முன் சொல்லப்பட்ட ஆறு சுவைகளும் தோஷங்களின் ஏற்றக் குறைவுகளைச் செய்யினும் இவ்வாறாம் ஜீர்ணத்தில் இனிப்பு, புளிப்பு, காரம், என்று முவ்விபாகங்களாய் மாறுகின்றன. அச்சமயத்தில் ரஸங்களைவிட விபாகங்கள் பலசாலிகளாக விருப்பின் பிந்தினவைகளைப் பொறுத்துத் தோஷங்களின் ஏற்றக்குறைவுகள் ஏற்படுகின்றன. ஜீர்ணானந்தர முண்டாகும் உஷ்ணம், சீதம், என்னும் இரு வீரியங்கள் பலசாலிகளாக விருப்பின் ரஸ விபாகங்களைப் பொறுத்தல்லாது வீரிய குணங்களை ஒட்டி பதார்த்தங்கள் காரியகாரிகளாகின்றன. அன்னாட்களிலேயே சிலர் குருலகு முதலிய எண்வித வீரியங்களிருப்பதாய்க் கூறியிருக்கிறார்கள். அவைகள் ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அவ்வளவு ஜாஸ்தியாய் ஒப்புக்கொள்ளப்படத்தேவையில்லை என்றும் உலகத்திலுள்ள எவ்வித வஸ்துக்களும் உஷ்ணம் அல்லது சீதம் என்னும் இரு குணங்களைத்தாண்டி நிற்க முடியாதாகையால் உஷ்ணம், சீதம் என்னும் இருவித வீரியங்களை மட்டில் ஒப்புக்கொண்டு ஆசாரியாள் வற்புறுத்தியுள்ளார்கள். உலகத்தில்

ஏற்பட்டுள்ள நாம் அறிந்து மறியாமலுமுள்ள எவ்வஸ்துவும் வைத்தியோபயோகி எனக்கண்டறியும் சுலபத்தை அறு சுவைகளினால் முவ்விபாகங்களினால் இரு வீரியங்களினால் நமக்கு உபதேசிக்கப்பட்டிருப்பதால் எவ்வஸ்துவையும் வைத்யோபயோகியாக எடுத்துக்கொள்ள வைத்தியர்கள் அஞ்சமாட்டார்கள் என்பது விளக்கமாகின்றது.

ஹிருதயரோகங்கள் (Diseases of the Heart)

(பத்திராதிபர்)

வைத்திய நூல்களில் ஹிருதயரோகங்கள் மிக முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றன. தற்காலத்தில் நமது நாட்டில் இந்நோய்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதைக் காணுகின்றோம். நவீனர்கள் கண்டுபிடித்துள்ள ஹிருதய நோய்கள் நமது நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்பது கவனிக்கவேண்டிய விஷயமாகும். சுதேச நூல்களில் ஹிருதயநோய்கள் சொல்லப்படவில்லையென்றும் ஆகவே சுதேச வைத்தியர்களுக்கு இது புதிதென்றும் பலர் நினைக்கின்றனர். சுதேச வைத்தியர்களில் கூட பலர் உண்மையாக இவ்விதமே கருதுகின்றனர். நவீனமும் சேர்ந்து கற்ற சுதேச வைத்தியர்கள் இந்நோய்களில் நவீன நூல்களே ஆதாரங்களென்றும் நவீன நூல்களையறியாத சுத்த சுதேச வைத்தியர்களுக்கு ஹிருதய நோய்களே தெரியாதென்றும் கலப்பு முறையால் தங்களுக்கு இந்நோய்களில் விசேஷ பரிசயம் கிடைத்துவிட்டதென்றும் பெருமைப்படுகின்றனர். ஆகவே இதைப்பற்றி ஆராயவேண்டியது கடமையாகின்றது. ஹிருதய நோய்கள் நன்கு விவரிக்கப்படாத ஓர் முறை இருக்குமாகில் உண்மையில் அது பூர்ணமாகாது. உறுப்புகளில் ஹிருதயமென்பது ஓர் முக்கிய உறுப்பாதலின் அதைப்பற்றி வரும் நோய்களைப் பூர்ணமாக விவரிக்காத ஓர் முறையைப் பின்பற்றுவதில் சற்றும் பயனில்லை. ஆனால் நமது நூல்களில் ஹிருதய நோய்கள் நன்கு விவரிக்கப்பட்டு அதற்குத் தகுந்த மருந்துகளும் பூர்ண சிகித்ஸையும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் Heart என்று அழைக்கப்படும் உறுப்பையே இங்கு நாம் ஹிருதயமென வைத்துக்கொள்கிறோம். சென்ற சந்திரிகைகளில்

இதைப்பற்றிய வியாசம் விவரமாக வெளி வந்திருப்பதால் இந்த விவாதத்தில் தக்காலம் நாம் இறங்க விரும்பவில்லை. அதைப்பற்றிய சர்ச்சையைப் பிறகு கவனிப்போம். ரக்தக்குழாய்களுக்கு ரக்தத்தைச் செலுத்தும் நான்கு அரைகளுடன் கூடிய ஓர் உறுப்பை (Heart) இங்கு ஹிருதயமென வியவஹாரத்திற்கு வைத்துக் கொள்கிறோம். "ஹிருதயம்" அல்லது "ஹிருத்" என்ற வடமொழியே Heart என மாறியுள்ளதென்பது யாவரும் அறிந்ததே. இந்த ஹிருதயத்தில் காணும் நோய்களை அடியில் காணுமாறு ஆங்கிலத்தில் வகுத்திருக்கின்றனர் (1) Angina Pactoris (2) Hydropericardium (3) Pericarditis (4) Myocarditis (5) Endocarditis (6) Dilatation என்ற இந்த ஆறுவியாதிகள் நவீன நூல்களில் முக்கியமாகக் காணப்படுகின்றன. சுதேச நூல்களில் ஹிருதயத்தை பொட்டிய வியாதிகள் அடியிற் காணுமாறு கூறப்பட்டுள்ளன. அவையாவன (1) ஆயாமம் (2) ஸ்தம்பம் (3) சூலம் (4) ஆமம் (5) ஹிருத்த்ரவம் (6) ஹிருத்ப்ரமோஹம் (7) ஜாட்யம் (8) ஹிருல்லேபம் (9) ஹிருத்க்ரஹம் என்று ஒன்பது நோய்கள் காணப்படுகின்றன. ஐந்து விதமான ஹிருதய நோய்களில் கீழ்ச் சொன்ன 9 நோய்களும் உபத்திரவங்களாக வருகின்றன. வாதப்பிரகோபத்தால் உண்டாகும் ஹிருதய நோயில் சூலம், ஸ்தம்பம், திரவம், மோஹம், ஆக இந்த நான்கு உபத்திரவங்களும் கபப்பிரகோபத்தால் ஸ்தம்பம், ஹிருல்லேபம், ஆக இரண்டு உபத்திரவங்களும் உண்டாவதாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆயாமம், ஆமம், ஜாட்யம், ஹிருத்க்ரஹம், என்ற இந்த நான்கு உபத்திரவங்கள் எந்த ஹிருதயரோகத்தின் உபத்திரவங்களென வியக்தமாகக்கூறப்படாவிட்டாலும் அனுமானத்தால் நாம்அறியமுடிகின்றது. "வ்யாமஸ்தம்பசூலாமே ஹிருதிமாருததூஷிதே" என்றும் "ஸ்தம்பஜாட்யாம ஸம்யுக்தேபிசவாதிகே" என்றும் வசனங்களைக்கொண்டு இந்த நான்கும் வாதஹிருதய நோயின் உபத்திரவங்களாகக் கொள்ளலாம். ஆங்கில வைத்தியத்தில் சொல்லப்படும் ஹிருதய நோய்களும் சுதேச நூல்களில் கூறப்படும் ஹிருதய நோய்களும் எந்தமட்டில் பொருந்துகின்றனவென்பதை கவனிப்போம். (1) Angina Pactoris என்பது ஹிருத்சூலம் (2) Dila-

tation என்பது ஹிருதய ஆயாமம் (3) Hydro Pericardium என்பது ஹிருத் த்ரவம் என்றும் விசேஷித்துப் பொருத்தமுள்ள தாகக் காணப்படுகின்றன.

1. ஹிருதயசூலம்—Angina pactoris—இதைத் தமிழில் தமரக வாயு என்பர். ஆயுர்வேத நூல்களில் ஹிருதயசூலம் என்பது ஓர் உபத்திரவமாகப் பல நோய்களில் கூறப்பட்டுள்ளது. சுதேச நூல்களில் வியாதிகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றன. மகாரோகங்களென்றும் க்ஷுத்ரரோகங்களென்றும் அவைகள் அழைக்கப்படுகின்றன. நிதானம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்பிராப்தி என்ற ஐந்து வகைகளும் வியக்தமாகச்சொல் லப்பட்டிருக்கும் நோய்கள் மகாரோகங்களாகும். அவ்விதமின்றி வியாதியின் பெயர் மாத்திரம் கொண்டு கூறப்படும் வியாதிகள் க்ஷுத்ரரோகங்களாகும். "மஹாவிகாராஸ்து யதாஸ்வ மேமேவாப தேசஸ்யந்தே க்ஷுத்ரவிகாரா: புந: யதேவாங்க:மாவிசந்தி ததுபபத மேவகாமலபந்தே" என்ற வாக்யங்களும் இதை விளக்குகின்றது. ஆகவேஇந்த ஹிருதயசூலம்என்ற நோய்கொடியதாக இருந்தபோதி லும்மகாரோகங்களில் சேராமல்போகின்றது ஹிருதயத்தையொட் டிவரும் வலிக்கு ஹிருதயசூலமெனப்பெயர். ஹிருதய பேசியில் உண்டாகும் தீவிர வலிக்குக் காரணம் வாதப்பிரகோபமாகும். சரீ ரத்தில் எந்த பாகத்தில் வலிவந்தபோதிலும் அந்த வலி அனைவற் றிற்கும் காரணம்வாதப்பிரகோபமே"சூலர் நர்தே அநிலாத்"வாதப் பிரகோபமின்றி வலியுண்டாகாது என்று வசனம் கூறுகின்றது. இது வாதப்பிரகோபத்தால் காணும் ஹிருதய நோய்க்கு ஓர் உபத் திரவமாகின்றது. முக்கியமான ஓர் வியாதியை யொட்டிப்பிறகு காணும் அப்பிரதான நோய்க்கு உபத்திரவமெனப்பெயர். ஹிரு தயகோசம் வாதப்பிரகோபத்தால் பீடிக்கப்பட்ட நிலைமையில் வாத ஹிருத்ரோகமெனப்பெயர். அவ்வியாதியில் காணும் வலிக்கு ஹிருதயசூலமெனப்பெயர். "Angina is a form of pain in the praecordial region, radiating in other directions especially towards the left shoulder, with a feeling of great anxiety of oppression with more or less dys-

pnoea and is associated with a number of morbid conditions of the heart and vessels, more perticularly with atheromatous changes in coronary vessels" இதன் பொருள்—"ஆஞ்ஜினா என்பது ஓர்வகை வலி. அது ஹிருதயப்பிரதேசத்தில் உண்டாகி மற்ற இடங்களுக்கும் பரவும். இடதுதோள் பக்கத்தில் விசேஷித்துப்பரவும். மிகுந்த கவலை, உத்ஸாஹபங்கர், மூச்சுத்திணரல், இவை காணும். ஹிருதயத்திலும் ரக்தக்குழாய்களிலும் விசேஷித்து ஹிருதய ரக்தக்குழாய்களிலும் வியாதிக்குரிய பல மாறுபாடுகளுடன் இந்நோய் சேர்ந்திருக்கிறது.' ஆஞ்ஜினா என்ற இந்த நோய் காணும்பொழுது ஹிருதயத்திலும் அதை யொட்டிய ரக்தக்குழாய்களிலும் வியாதிக்குறிய மாறுபாடுகள் இருப்பதாகக் கூறப்படுவதால் இந்த மாறுபாடே வாதஹிருத்ரோகமென சுதேச நூல்களில் காணப்படுகின்றது. ஆகவே ஆஞ்ஜினா என்பது ஓர் தனித்தநோயல்லவென்பதும் ஹிருதயத்திலுள்ள வேறு நோய்களை யொட்டியே இது காணுவதாகவும் ஆங்கில நூலில் கூறுவது பொருத்தமாகின்றது. மேலும் with a feeling of great anxiety = பயம், oppression = திநதா, dyspnoea = சுவாஸரோதம், என்று முக்கியமான ஆங்கில லக்ஷணங்களும் வாக்படலக்ஷணங்களும் பொருந்துகின்றன. மற்ற நோய்களில் காரணங்கள் கூறப்படுவதுபோல் இந்நோயில் காரணங்கள் ஆங்கில நூல்களிலும் காணப்படவில்லை. ஹிருதயத்திலுள்ள நரம்புகள், மாமிசங்கள், ரக்தக்குழாய்களில் திடீரெனத்தோன்றும் ஓர் பிகுவு, ஆகிய இவைகளில் ஏதோ ஒரு காரணத்தால் இவ்வியாதி யுண்டாவதாக அபிப்பிராய பேதம் ஆங்கில நூல்களில் காணப்படுகின்றது. ஆங்கில சிகித்ஸையில் இந்நோய்க்கு விசேஷ மருந்துகள் காணப்படவில்லை. நோய் கண்டபிறகு Amil nitrite என்ற மருந்தை நோயாளியின் நாசித்துவாரங்களில் முகரும்படி செய்வது முக்கிய சிகித்ஸையாகும். ஷை மருந்து கிளாஸ் டியூப்களில் அடைக்கப்பட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கின்றது. அதில் ஒரு டியூப்பை எடுத்து ஓர்சிறு துணியில் திராவகம் விழும்படி செய்து நோயாளியின் மூக்கின் பக்கத்திலே பிடிப்பது முறை. இது தத்காலசாந்தியாகும். Trinitrin அல்லது Nitroglycerine மருந்தை உள்ளுக்கும் பயோகிக்

கின்றனர் இதில் இன்னும் சில மருந்துகள் உபயோகிக்கப்பட்ட போதிலும் கீழ்க்கண்ட சிகித்சையே முக்கியமாகும். இந்நோயில் ஆயுர்வேதம் கூறும் சிகித்ஸை விசேஷித்து மான்கொம்பாகும். "சரா வஸம்புடே தக்த்வா ச்ருங்கம் ஹரிணஜம் பிபேத் கவ்யேனஸர்பிஷா பிஷ்டம்ஹ்ருச்சூலம்நச்யதித்ருவம்" ஓர் மண் பானையில்மான் கொம்பைத்துண்டாகச்செய்துபோட்டுமேல்வாணைமூடி அடுப்பேற்றி எரித்துகொம்புவெந்தவுடன்எடுத்துப் பொடிசெய்து பசும்நெய்யில்கால் தோலா பொடியைக் குழைத்து உள்ளுக்குச் சாப்பிட ஹ்ருதயசூலம் போமென்று யோகரத்னாகரம் முதலிய பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பல தடவைகளில் நாம் உபயோகித்து நல்ல குணம் கண்டிருக்கிறோம். Nitroglycerine போன்ற மருந்துகள் விஷத்தன்மை வாய்ந்தவை. மான் கொம்பு ஒரு தோஷமுமின்றி குணம் கொடுப்பதுடன் ஓர் அமிர்த வஸ்துவாகவுமிருக்கின்றது. மேலும் கோஷ்டம் என்ற சரக்கும் இந்நோயில் மிகுந்த குணம் கொடுக்கின்றது. "சூர்ணம் புஷ்கர மூலஸ்ய மதுநா ஸஹ லேஹயேத் I ஹ்ருச்சூலச்வாஸ காஸக்நம் ஹ்ருதாமயஹரம் பரம் II" புஷ்கர மூலம் என்ற சரக்கு நமது கடைகளில் கிடைக்கும் சாதா கோஷ்டமாகும். அதைப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து கால் தோலாவளவு தேனில் குழைத்துச் சாப்பிடவும். என்பது வைத்ய வசனத்தின் பொருள். இந்த இரண்டு சரக்குகளும் தனித்து ஹ்ருதயசூலத்தைப் போக்குகின்றன தவிர பலாதைலம் ஸுகுமாரசம் யஷ்டி சதபாகம், மஹாஸ்நேஹம், சிலாஜது (கல்மதம்) பிராஹ்மரஸாயனம், ஆமலகலேஹம், அகஸ்த்ய ரஸாயனம், புஷ்கர மூலாஸவம் என்ற மருந்துகளை விசேஷித்து ஹ்ருதயரோகங்களில் சமயத்திற்கேற்றபடி உபயோகிக்க வேண்டும். (சந்திரிகையில் வெளிவரும் பலவகை என்ற நூலில் 57, 58, 59, 60, 61, இலக்கமுள்ள மருந்துகளில் இவைகளைக் காணலாம்.) இவற்றுள் பலாதைலம், ஸுகுமாரம், யஷ்டி சதபாகம், மஹாஸ்நேஹம், என்ற நான்கு மருந்துகளும் ஹ்ருதயசூலத்தில் நன்மை செய்கின்றன. மான்கொம்பு பஸ்மத்தைச் சாப்பிட்டு அனுபானமாக பலாதைலத்தில் அரை முதல் ஒரு டிராம் அளவு எடுத்து வெந்நீரில் கலந்து

உள்ளுக்குக் கொடுப்பதில் விசேஷ நன்மை காணப்படுகின்றது.

2. ஹிருதயாயாமம்—Dilatation of Heart. ஆயாமம் என்ற வடமொழிக்கு நீண்டு போதல் என்பது பொருள். இது வாதப்பிரகோபத்தால் ஏற்படுகின்றது. திரிதோஷப் பிரகோபங்களால் வரும் விபரீதச் செய்கைகளைக் குறிப்பிடும் பொழுது வாக்படர் "ஸ்ரம்ஸ வ்யாஸ வ்யத ஸ்வாப ஸாத ருக் தோத பேதனம் ஸங்க அங்கபங்க ஸங்கோச வர்த ஹர்ஷண தர்ஷணம் | ஸ்தம்ப: கஷாயரஸதா வாயோ: |" என்று கூறுகின்றனர். இதில் சில குறிப்பிட்ட பதங்களுக்குப் பொருள் கூறுகின்றோம். வ்யாஸம் விரிதல் அல்லது நீண்டு போதல். இயற்கைக்கு அதிகமாக நோய்க்குரிய விரிதலை இப்பதம் குறிக்கின்றது. உள் உறுப்புகளிலோ அல்லது வெளிபாகங்களிலோ இயற்கைக்கு அதிகமாகக் காணப்படும் விரிதலுக்குக் காரணம் வாதப்பிரகோபமாகும். ஆமாசயத்தில் காணப்படும் விரிதல் Dilatation of Stomach ஆமாசய ஆயாமம் அல்லது ஆமாசயவ்யாஸமாகும். ஸங்கம் = தடைபடுதல் என்பது இப்பதத்தின் பொருள். சரீரத்துள்ளும் வெளியிலும் இயற்கையாக வெளியேறும் அம்சங்கள் அவ்விதமின்றி தடைபடுதலுக்குக் காரணம் வாதப்பிரகோபமே. ரக்தம் முதலிய தாதுக்களின் ஓட்டம் இயற்கைக்கு விருத்தமாக ரக்தக்குழாய்களில் தடைபட்டாலும் அது ஸங்கமாகும். ஸங்கோசம்—குறுகுதல் என்பது இதன் பொருளாகும். அதாவது சரீரத்து உள்ளும் வெளியிலும் இயற்கைக்கு விருத்தமாகக் காணப்படும் குறுகுதலுக்குக் காரணம் வாதப்பிரகோபமாகும். சரீரத்துள் ரக்தக்குழாய் முதலியவைகள் இயற்கைக்கு விருத்தமாகச் சுருங்கிவிட்டால் அதை ஸிராஸங்கோசம் அல்லது தமனீ ஸங்கோசம் எனச் சொல்லவேண்டும். இந்த ஸங்கோசத்தை ஆங்கிலத்தில் Stenosis என்பர். Mitral Stenosis, முதலியன இவ்வகுப்பைச் சேர்ந்தவை. இந்த ஸங்கோசமே Stricture என்ற பதத்தாலும் அழைக்கப்படுகின்றது. இவ்விருவகுப்பும் வாதப்பிரகோபத்தால் உண்டாகி ஸங்கோசமெனச் சொல்லப்படுகின்றது. ஸ்தம்பம்—விறைத்துப் போதல் அவயவங்களுக்கு இயற்கையாக உள்ள Elasticity என்ற நெகிழும் தன்மையற்றுப் போதல் என்பது இதன் பொருள்.

187. பிந்துகிருதம்:—பசுநெய் சின்னப்படி இரண்டு, எருக்கம் பால் தோலா 8, சதுரக்கள்ளிப்பால் தோலா 24, இவைகளைச் சேர்த்து அதில் கடுக்காய், கம்பில்லம், சிவதை, சரக்கொன்றைப் புளி, வெள்ளைக்காக்கணட்டான், அவிரிவேர், விருத்ததாரகவேர், கருப்புக்காக்கணட்டான், கொடுவேலி, வகைக்குத்தோலா நான்கு இடித்துப் பொடிசெய்து கல்கமாகப் போட்டு சுத்தஜலம் சின்னப் படி எட்டு சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சிப் பத்திரப்படுத்தி சரீரக்கூறுக்குத் தக்கப்படி அரைக்கால் தோலா வரையில் கொடுக்க பேதியாகும். குறிப்பு—செங்கல்பொடி போன்ற ஓர் கடைச் சரக்குக்குக் கம்பில்லமெனப் பெயர். வடதேசங்களில் கிடைக்கும். மலையாளத்தில் கம்பிப்பாலை என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. "இஷ்டிகாசூர்ணஸங்காச:" என்று செங்கல்பொடி போன்று இருக்கும் என்ற லக்ஷணம் கூறப்பட்டுள்ளது விரோதிக்கும்.

188. சூலிகா—ரஸம், கந்தகம், வத்ஸநாபி, திரிபலை, திரிகடு, எண்ணை வெங்காரம், வகைக்குத்தோலா ஒன்று, நேர்வாளவிதை தோலா நான்கு, இவைகளைக் கல்வத்திலிட்டு கரிப்பான் ரஸத்தால் அரைத்துக் காயவிட்டுத் தேன் விட்டுக் குன்றியளவு குளிகை உருட்டவும். ஒன்று அல்லது இரண்டு குளிகை உபயோகிக்கப் பேதியாகும். குறிப்பு—நேர்வாளவிதையைச் சுத்தி செய்து கொள்ளவேண்டும். மேல் ஓட்டையும், உள் நாக்கையும் பருப்பை இரண்டாக உடைத்தால் அதன் உள் புறத்தில் இருக்கும் மெல்லிய தோலையும் முதலில் விலக்கவேண்டும். பிறகு அதைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து ஓர் புதிய மண் சட்டியில் அதிகப் பருமனில்லாமல் தட்டி வைக்கவும். நேர்வாளத்தில் விஷாம்சம் பொருந்திய வஸ்து மூன்றாகும். அதாவது முழுபருப்பை இரண்டாகப் பிளந்தால் அதில் ஓர் முளை இருக்கும். இதையே நாக்கு என்பர். உள் பருப்பிலிருக்கும் மேல் தோல். மூன்றாவது வித்திலுள்ள எண்ணை; இவற்றுள் முதல் இரண்டையும் விலக்கி விட்டுப் பிறகு எண்ணை போகும்படி செய்ய வித்துக்களை அரைத்து புதிய சட்டியில் விழுதை அப்பினால் சட்டி அதன்

எண்ணெயை உறிஞ்சிவிடும். எண்ணெ அதிகமாகக் குறைந்து விட்டால் பிறகு பேதியாவது கடினம். ஆகவே அதிக எண்ணெயும் கூடாது. எண்ணெ முழுவதும் போகக்கூடாது. இதைக் கவனியாமல் செய்வதில் பல விபத்துக்கள் நேர்ந்துவிடுகின்றன.

189. அபயாரிஷ்டம்—கடுக்காய் தோலா 400, திராக்ஷை தோலா 200, வாய்விளங்கம் தோலா 40, இலுப்பைப்பூ தோலா 40, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 128 விட்டு 32 படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் சர்க்கரை தோலா 400 சேர்த்து சிறுநெரிஞ்சி, சிவதை, மல்லிவிதை, காட்டாத்திப்பூ, பேய்க்கொம்மட்டிவேர், செவ்வியம், சதகுப்பை, சுக்கு, தந்திவேர், இலவம்பிசின், வகைக்குத்தோலா 8 பொடிசெய்து அதில் போட்டு ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் சாப்பிடவும்.

190. வாரிசோஷணம்—கந்தகம் தோலா 24, வங்கபஸ்மம் தோலா 12, ரஸம் தோலா 6, அப்பிரகச்சிந்தூரம் தோலா 24, அயச்சிந்தூரம் தோலா 8, தாமிரச்சிந்தூரம் தோலா 9, சுவர்ண சிந்தூரம் தோலா 2, வெள்ளிபஸ்மம் தோலா 7, வஜ்ரபஸ்மம் தோலா 13, சுத்தம் செய்த சுவர்ணமாக்ஷிகம் தோலா 16, அன்ன பேதி தோலா 18, சுத்தம் செய்த துத்தம் தோலா 6, சுத்தம் செய்த தாளகம் தோலா 4, சுத்தி செய்த மனோசிலை தோலா 3, கல்மதம் தோலா 5, முத்துபஸ்மம் தோலா ஒன்று, எண்ணெ வெங்காரம் தோலா 2, இவையனைத்தையும் கல்வத்திலிட்டு அரைத்து எலுமிச்சம்பழ ரஸத்தால் ஏழு பாவனை செய்து ஒரே உருண்டையாக உருட்டி நன்றாகக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி முழுவதும்சீலைமண்செய்து காயவைத்து வாலுகாயந்திரத்தில் வைத்து வாய் மூடி சீலைமண் செய்து 24 மணி நேரம் எரித்து ஆறவிட்டு எடுக்கவும். முசிழம்விதை கஷாயம் கண்டங்கத்திரி ரஸம், முள்ளிரஸம், சீந்தில், கடுக்காய் கஷாயம், இவைகளில் முறையே ஏழு பாவனை செய்து பிறகு விருத்தகாரத ரஸம், காக்கணட்டான், இவைகளால் பாவனை செய்து உலர்த்திப் பத்திரப்படுத்தி நான்கு குன்றிமணியிடை உபயோகிக்கவும்.

குறிப்பு—வஜ்ரபஸ்மம் சேர்ப்பதென்பது அசாத்தியம். ஆகவே அதற்குப் பதிலாக அந்த இடைக்கு வைக்ராந்த பஸ்மாவை எடுத்துக் கொள்ளலாம். வஜ்ரத்தின் குணம் சற்றேறக்குறைய வைக்கிராந்தத்திற்கும் உண்டென நூல்கள் கூறுகின்றன.

பாண்டு.

191. மண்டூரவடகம்—சுவர்ணமாக்ஷிகம், மரமஞ்சள் தோல், செவ்வியம், தேசாவாம், தேவதாரு, திரிகடு, கொடுவேலி, வாய் விளங்கம், திரிபலை, கோரைக்கிழங்கு, வகைக்குத்தோலா நான்கு, சுத்திசெய்த மண்டூரம் தோலா 112, இவைகளை ஓர் இரும்பு வாணலியில் போட்டு கோமூத்திரம் சின்னப்படி 22 விட்டு அடுப் பேற்றி எரித்து கோமூத்திரம் சுண்டினவுடன் இறக்கி அதை வடகமாகச் செய்து வெய்யிலில் உலர்த்தவும். தினம் கால்தோலா வளவு ஒவ்வொரு வேளையும் உபயோகிக்கவும். குறிப்பு—பழைய மண்டூரம் அதாவது நூறு வருஷம் சென்ற மண்டூரக்கல் (இதையே கிட்டமென்பர்) எடுத்து அதைத் தணலில் காய்ச்சி கோமூத்திரத் தில் தோய்க்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்யச் சுத்தியாகும். அதைக் கல் உரலில் போட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இது நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அனேக வைத்தியர்களும் இவ்விதமே செய்வார்கள். ஆனால் இதைச் சில புடம் இடுவது நமது வாடிக்கை. கோவைச்சாரில் ஷெடி வஸ்திர காயம் செய்த பொடியைப் போட்டு அரைத்துக் கஜபுடமிடவும். இவ்விதம் சுமார் இருபது புடமிட மண்டூரம் புஷ்பம்போல மிருது வாகும். அதைத் தனித்தும் உபயோகிக்கலாம். கால் தோலா இடையுள்ள வடகமாக உருட்டவும். இதில் பசையில்லாததால் உருட்டுவது சற்று கடினம். மோரும் சாதமும் பத்தியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் தனி மோர் சாதம் பத்தியம் சாப்பிடுவதில் சிலருக்குக் கடுமையான மலபந்தம் காணுகின்றது. ஆகவே புளியில்லாமல் பத்தியம் இருப்பது உசிதமாகக் காணு கின்றது.

192. தாப்யாதி வடகம்—சுவர்ணமாக்ஷிகச்சிந்தூரம், கல்மதம், வெள்ளிபஸ்மம், மண்டூரம், வகைக்குத்தோலா 20, கொடுவேலி,

திரிபலே, திரிகடு, வாய்விளங்கம், வகைக்குத்தோலா நான்கு, சர்க்கரை தோலா 32, இவற்றுள், சுவர்ணமாக்ஷிகச் சிந்தூரம், முதலிய நான்கு சரக்குகளேயும் சர்க்கரையையும் விலக்கி மற்றவைகளே இடித்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பிறகு ஓர் இரும்பு வாணயில் கொஞ்சம் ஜலம் விட்டுக் கல்மதத்தை முதலில் போட்டு அடுப்பேற்றி நன்ருகக் கரைந்தவுடன் சர்க்கரையைப் போட்டு அது நன்ருகக்கரைந்தபிறகு மற்றப்பொடிகளேயும் சுவர்ண மாக்ஷிகம் முதலியவைகளும் நன்ருகக்கலந்து போட்டுக் கிண்டி கிளறி உருட்டும்பதம்வந்தவுடன் இறக்கிவெய்யிலில்வைத்துநன்ருகக் காய்ந்தபிறகு பொடிசெய்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு நான்கு குன்றுமணியிடை பொடியைத் தேனில் குழைத்துச்சாப்பிடவும். குறிப்பு—பொடியாகச் செய்யும்படி நூல்களில் காணப்பட்ட போதி லும் நான்கு குன்றி யிடை குளிகைகளாகச்செய்வது அனுகூலமாக விருக்கின்றது. ஏனெனில் மருந்து வாய்க்குக் கசப்பாக விருப்பதால் சிலர் அருவருப்பை யடைகின்றனர். குளிகையாக விருப்பதில் கடிக்காமல் விழுங்கிவிட முடிகின்றது. சிலருக்குக் குளிகைகள் வயிற்றில் கரைந்து ஜீர்ணமாகாமல் அப்படியே குளிகையாகவே மலத்துடன் போய் விடுகின்றது. ஆகவே குளிகைகளே இரண்டு அல்லது நான்காக பிளக்கும்படி தட்டிப்பிறகு அப்படியே வாயில் போட்டுக்கொண்டு ஜலம்விட்டு விழுங்குவது உசிதம். கல்மதம் என்ற சிலாஜது அயம் ஸ்வர்ணமாக்ஷிகம் இவைகளே பாண்டு நோயில் மிகக்குணம் கொடுக்கின்றது. பாண்டுநோய்களே ஒட்டி வரும் வீக்கங்களில் இது மிகுந்த நன்மை செய்கின்றது. சரீரத் திலுள்ள நீரைத்தாராளமாகப் பிரித்து மூத்திரம் மூலமாக வெளிப் படுத்துகின்றது. மலபந்தங்களுக்கு உசிதமானசிகித்சை செய்ய வேண்டும்.

193. சிலாஜதுவடகம்—உயர்ந்த கல்மதம் தோலா 32 எடுத்து ஓர் இரும்பு பாத்திரத்தில் வைத்து அதில் வெப்பாலேப் பட்டை, திரிபலே, வேப்பம்பட்டை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, இவை வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து அதில் எட்டுப்படி ஜலம்விட்டு ஒரு படியாக வற்றவைத்து வடிகட்டி பாவனை செய்ய வும். இவ்விதம் [illegible] அல்லது முப்பது தடவை

பாவனைசெய்யவும். ஒவ்வொரு பாவனையிலும் வெப்பாலைப்பட்டை முதலிய எட்டு சரக்குகளையும் வகைக்குநான்கு தோலாஎடுத்துமுன் போல கஷாயம் செய்துகொள்ளவும். பாவனைகளை நல்ல வெயிலில் செய்யவும். முப்பது பாவனை உத்தமம். கடைசிபக்ஷமாகப் பத்து பாவனைகளைச் செய்யவும். பிறகு அதில் சர்க்கரை தோலா 32 சேர்த்து மூங்கிலுப்பு, திப்பிலி, நெல்லிவற்றல், கர்க்காடசிருங்கி, வகைக்குத்தோலா நான்கு, கண்டங்கத்தரி வேர், கண்டங்கத்தரி பழம், (காய்ந்த உலர்ந்தவற்றல்), வகைக்குத்தோலா 2, திரிஜாதம் வகைக்குத்தோலா ஒன்று இவைகளை இடித்துவஸ்திரகாயம்செய்து அந்தப்பொடியைப் போட்டு நன்றாகக்கலந்து பிறகு தேன் தோலா 12ம் சேர்த்து கலந்து பத்திரப்படுத்தி வேளைக்கு மூன்று அல்லது நான்கு குன்றியிடைபை பால் அனுபானத்தில் சாப்பிடவும்.

194. பர்பாடகாரிஷ்டம்—பர்ப்பாடகம் தோலா 400 இடித்து ஓர் பானையில்போட்டு ஜலம் சின்னப்படி 128 சேர்த்து 32 படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் சர்க்கரை தோலா 800 சேர்த்து காட்டாத்திப்பூ தோலா 64, சீந்தில், கோரைக் கிழங்கு, மரமஞ்சள், தேவதாரு, கண்டங்கத்திரிவேர், சிறுகாஞ் சொரி, செவ்வியம், கொடுவேலி, திரிகடு, வாய்விளங்கம், வகைக்குத் தோலா நான்கு, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டு மூடிஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் உபயோகிக்கவும்.

195. த்ரிகத்ரயலௌஹம்—மண்டூரம் தோலா 4, பசுநெய் தோலா 4, சர்க்கரை தோலா 4, தேன் தோலா 4, காந்தசிந்தூரம் தோலா ஒன்று, திரிகடு, திரிபலை, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, கொடுவேலி, வகைக்குத் தோலா ஒன்று இடித்து வஸ்திரகாயம் செய்த பொடி, இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வெய்யிலிலும் இரவிலும் வைத்திருந்து மூன்று குன்றுமணியிடை உருட்டி மாத்திரையாகச் செய்து தினம் ஒரு மாத்திரை பால் முதலிய அனுபானங்களில் கொடுக்கவும்.

196. பஞ்சாமிருதலௌஹமண்டூரம்—அயச்சிந்தூரம், தாமிர பஸ்மம், கந்தகம், அப்பிரகச்சிந்தூரம், ரஸம், திரிகடு, திரிபலை,

கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கொடுவேலி, நில்வேம்பு, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், புஷ்கரமூலம், ஓமம், ஜீரகம், கருஞ்ஜீரகம், பூலாங்கிழங்கு, மல்லிவிதை, செவ்வியம், இவைசமயிடையாகஎடுத்து முதலில் ரஸம், கந்தகம், இவைகளைக்கல்வத்தில்பொடிசெய்து அயம், தாமிரம், அப்பிரகம், இவைகளை அதோடு சேர்த்து மற்ற கடைச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து சேர்த்து பொடி அனைவற்றிற்கும் இருமடங்கு சுத்தித்த மண்டூரம் சேர்த்து ஓர் இரும்புச் சட்டியிலிட்டு மண்டூரத்திற்கு நான்கு கோமூத்திரம் விட்டு அடுப்பேற்றி எரித்துப் பிறகு மண்டூரத்திற்கு எட்டு மடங்கு வெள்ளைச் சாரணத்தி கஷாயம் விட்டு எரித்து கஷாயம் வற்றினவுடன் வெய்யிலில் காயவைத்துப் பொடிசெய்து தேன் நான்கு தோலா சேர்த்துக் கலந்து அரைக்கால் தோலா முதல் கால்தோலா வரை அந்தப்பொடியை நீர்முள்ளி கஷாயத்துடன் சாப்பிடவும். குறிப்பு— மொத்தச்சரக்கு 25 வகைக்கு ஒரு தோலா அளவு எடுத்துக் கொண்டால் மண்டூரம் தோலா 50 எடுத்துக் கொள்ளவேண்டும். நூல்களில் இவ்விதமிருந்த போதிலும் மண்டூரத்தை 25 தோலா எடுத்துக் கொள்ளுவது வழக்கமாக இருக்கிறது. கோமூத்திரம் தோலா 100 விடவேண்டும். வெள்ளைச்சாரணத்தி தோலா 28 எடுத்து இடித்து ஜலம் சின்னப்படி 7 விட்டுக் கஷாயம் வைத்து $1\frac{3}{4}$ படியாக வற்றவைத்து வடிகட்டி விடவும்.

சோபம் அல்லது வீக்கம். Dropsy, Anasarca.

197. புனர்நவாஸவம்— திரிகடு, திரிபலை, [illegible] வெரிஞை, கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், ஆடாதோடைவேர், ஆமணக்குவேர், கடுகுரோகிணி, யானைத்திப்பிலி, சாரணத்தி, வேப்பம்பட்டை, முள்ளங்கிக்கிழங்கு, சிறுகாஞ்சொறி, பேய்ப்புடல் வகைக்குத் தோலா நான்கு இடித்துப் பொடிசெய்து ஓர் பானையில் போட்டு காட்டாத்திப்பூ தோலா 64 இடித்துப் பொடிசெய்து சேர்த்து, திராக்ஷை தோலா 100, சர்க்கரை தோலா 400, தேன் தோலா 200, ஜலம் சின்னப்படி 64 சேர்த்துப் பானை வாய் மூடி ஒரு மாதம் வைத்திருந்து வடிகட்டி தினம் காலை மாலை ஒரு அவுன்சு சாப்பிடவும்.

198. **புநர்நவா கஷாயம்**—வெள்ளைச்சாரணத்தி, வேப்பம் பட்டை, பேய்ப்புடல், சுக்கு, கடுகுரோகிணி, சீந்தில், மாமஞ்சள், கடுக்காய், இவைகளைச் சமயிடை எடுத்துக் கஷாயம் செய்து ஒரு அவுன்சு வீதம் சாப்பிடவும்.

199. **தசமூலாதி**—தசமூலம் வகைக்குத் தோலா 40 இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படி 32 ஜலம் விட்டு நான்கு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி ஓர் இரும்புச்சட்டியில் விட்டு அதில் நூறு முழு கடுக்காயைப் போட்டு அடுப்பேற்றி எரித்து சர்க்கரை தோலா 400 சேர்த்துப் பாகுபதத்தில் திரிஜாதம் வகைக்குத்தோலா நான்கு, திரிகடு வகைக்குத்தோலா 5¼, யவ க்ஷாரம் தோலா ஒன்று, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டுக் கிளரி ஆறின பிறகு தேன் சின்னப்படி ஒன்று சேர்த்து கலந்து வேளைக்கு ஒரு கடுக்காயும் ஒரு தோலா லேகியமும் சாப்பிடவும்.

சீதபித்தம், உதர்தம், கோடம்.

200. **ஹரித்ராகண்டம்**—மஞ்சள் தோலா 32 இடித்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து ஓர் மண்பாத்திரத்தில்போட்டு அதில் பசும்பால் சின்னப்படி 8 விட்டு அடுப்பேற்றி சர்க்கரை தோலா 68, பசுநெய் தோலா 24 சேர்த்துச் சிறு தீயிட்டு வற்றின பிறகு திரிகடு, திரிஜாதம், வாய்விளங்கம், சிவதை, திரிபலை, சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, வகைக்குத்தோலா நான்கு இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டு நன்றாகக் கிளறி அயச்சிந்தூரம் தோலா நான்கு சேர்த்து எடுத்து வெய்யிலில் காயவைத்துப் பொடி செய்து கொண்டு தினம் வேளைக்கு ஒரு தோலா வீதம் இரு வேளை சாப்பிடவும். குறிப்பு—மஞ்சள் கிழங்காக எடுத்துக் கொள்ளவும், சில நாள் வைத்திருந்தால் இம்மருந்தில் கிருமி உண்டாகி விடுவதால் சுவல்ப அளவில் தேவைக்குத் தக்கபடி தயாரித்துக் கொள்ளுவதுடன் அடிக்கடி வெய்யிலில் வைத்துக் கொள்ளவும்.

201. **மஹாஹரித்ராகண்டம்**—மஞ்சள்கிழங்கு தோலா 16, சிவதை தோலா 16, கடுக்காய் தோலா 16, மாமஞ்சள், கோரைக்

கிழங்கு, ஓமம், குரோசாணி ஓமம், கொடுவேலி, கடுகுரோகிணீ, ஜீரகம், திப்பிலி, சுக்கு, திரிஜாதம், வாய்விளங்கம், சீந்தில், ஆடாதோடை, கோஷ்டம், திரிபலை, செவ்வியம், மல்லிவிதை, வகைக்குத் தோலா ஒன்று இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து ஓர் மண் பாத்திரத்தில் ஜீனி தோலா 160 சேர்த்துக் கொஞ்சம் ஜலம் விட்டுப் பாகுவைத்ததில் முன் பொடிகளுடன் அயச்சிந்தூரம் அப்பிரகச்சிந்தூரம், வகைக்குத்தோலா ஒன்று சேர்த்துக் கலந்து இறக்கி வெய்யிலில் வைத்துப் பொடிசெய்து கொண்டு தினம் வேளைக்கு ஒரு தோலா சாப்பிடவும்.

விஸர்பம். (அக்கி)

202. பூநிம்பாதி கஷாயம்—நிலவேம்பு, ஆடாதோடை, கடுகுரோகிணீ, பேய்ப்புடல், திரிபலை, வேப்பம்பட்டை, இந்த எட்டு சரக்கையும் சமயிடையாக எடுத்துக் கஷாயம் செய்து வேளைக்கு ஒரு அவுன்சு விதம் சாப்பிடவும்.

மஸூரி (வைசூரி)

203. படோலாதிகஷாயம்—பேய்ப்புடல், சங்கம்வேர் கோரைக் கிழங்கு, ஆடாதோடை, சிறுகாஞ்சொரி, நிலவேம்பு, வேப்பம் பட்டை, கடுகுரோகிணீ, பர்பாடகம், இந்த ஒன்பது சரக்குகளையும் சமயிடையாக எடுத்துக் கஷாயம் செய்து வேளைக்கு ஒரு அவுன்சு சாப்பிடவும்.

203. அமிருதாதி—சீந்தில், ஆடாதோடை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, ஏழிலைப்பாலை, கருங்காலி, கருப்புப்பிரம்பு, வேப்பம் இலை, மஞ்சள், மரமஞ்சள், இந்தப் பத்துச் சரக்குகளை சமயிடையாகக் கஷாயம் செய்து சாப்பிடவும்.

குஷ்டம். (Leprosy)

204. பஞ்சதிக்தகிருதம்—வேப்பம்பட்டை, பேய்புடல், கண்டங்கத்திரிவேர், சீந்தில், ஆடாதோடைவேர், வகைக்குத்தோலா 40, இடித்துப் பொடிசெய்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப் படி 32 விட்டுக் கஷாயம் செய்து எட்டுபடியாக வற்றவைத்து

57. பலாதைலம்—குருந்தொட்டிவேர் கஷாயம் சின்னப்படி 6, பசும்பால் சின்னப்படி 6 யவம், இலந்தைக்கொட்டை, தசமூலம் வகைக்கு தோலா $1\frac{3}{8}$ எடுத்து இடித்துச் சின்னப்படி நான்கு ஜலம் விட்டு கஷாயஞ்செய்து வற்றவைத்து வடிகட்டி ஒருபடி, நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, இவைகளை ஒன்றுசேர்த்து இரும்புச்சட்டியில் விட்டு அதில் மேதா, மகாமேதா, தேவதாரு, மஞ்சிஷ்டி, காகோலி, க்ஷீரகாகோலி, சந்தனம், நன்னாரி, கோஷ்டம், தகரை, ஜீவகம், ரிஷகம், இந்துப்பு, மாகாளி, கல்பாசி, வசம்பு, அகரு, சாரணத்தி, அமுக்கரா, சதாவரி, பால்மொதக்கன், அதிமதுரம், திரிபலை, போளம், சதகுப்பை, ஓரிலை, ஏலம், சன்னலவங்கப்பட்டை, பச்சிலை இவை வகைக்குத் தோலா அரை இடித்துப் பொடிசெய்து போட்டு சிறு தீயிட்டு எரித்துத் தைலபதத்தில் இறக்கி வடிகட்டவும். ஸூதிகா நோய் முதலிய நோய்களிலும் வாத நோய்களிலும் மிகுந்த நன்மை செய்யும். குறிப்பு—குருந்தொட்டிவேர் 96 தோலா எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 24விட்டு ஆறு படியாக வற்றவைத்து எடுத்துக்கொள்ளவும். யவம் முதலிய 12 சரக்குகளை இடித்துத் தனியாகக் கஷாயம் செய்துகொள்ளவும். மேதா முதலிய 31 சரக்குகளை இடித்துவஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும் மேதா, மகாமேதா, காகோலி, க்ஷீரகாகோலி, ஜீவகம், ரிஷபகம், என்ற ஆறு சரக்குகளும் தற்காலம் கிடைக்கின்றன. கிடைக்காவிட்டால் அவைகளுக்குப்பதிலாக வேறு சரக்குகளை எடுத்துக்கொள்ளவேண்டும். மேதா, மகாமேதா, இந்த இரண்டும் கிடைக்காவிட்டால் அவைகளுக்குப்பதிலாக தண்ணீர்விட்டான் கிழங்கையும் காகோலி, க்ஷீரகாகோலி, இந்த இரண்டிற்கும் பதிலாக அமுக்கராக்கிழங்கையும் ஜீவகம், ரிஷபகம், இந்த இரண்டிற்கும் பதிலாக மொதக்கன் கிழங்கையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

58. ஸூகுமாரகம்—வெள்ளைச்சாரணத்தி தோலா 400, தசமூலம், க்ஷீரகாகோலி, அமுக்கரா, ஆமணக்குவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, இருதர்ப்பை, நாணல், கரும்புவேர், பேய்க்கரும்புவேர், குசம், இவை வகைக்குத்தோலா 40, ஆக இந்த 21 சரக்குகளையும் இடித்துப் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 128 விட்டுக் கஷா

யம்செய்து சின்னப்படி 16 ஆக வற்றவைத்து வடிகட்டி அதை ஓர் இரும்புச்சட்டியில் விட்டு வெல்லம் 120 தோலா போட்டு அதில் ஆமணக்கெண்ணை சின்னப்படி இரண்டு, பசுநெய் சின்னப்படி நான்கு பசும்பால் சின்னப்படி நான்கு சேர்த்து திப்பிலி, தேசாவரம், இந்துப்பு, அதிமதுரம், திராக்ஷை, ஓமம், சுக்கு, இவை வகைக்குத்தோலா எட்டு பொடிசெய்து சேர்த்து கிருதபதமாக வடித்து எடுக்கவும்.

59. யஷ்டியாஹ்வயசதபாகம்—அதிமதுரம் தோலா நான்கு பொடிசெய்து சின்னப்படி இரண்டு நல்லெண்ணையில் சேர்த்து பசும்பால் சின்னப்படி 2 விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயிட்டு வடிக்கவும். இவ்விதம் நூறுதடவை செய்ய சதபாகமாகும். இது வாதரக்தம் முதலிய நோய்களுக்கு நல்லது.

60. மஹாஸ்நேஹம்—அரத்தை, ஜீரகம், அடபொதியன் கிழங்கு, குருந்தொட்டி, கண்டங்கத்திரிவேர், சாரணத்திவேர், சிறுதேக்கு, ஓரிலைவேர், வசம்பு, திரிகடு, ஆக இந்த 12 சரக்குகளும் வகைக்குத் தோலா ஒன்று பொடிசெய்து அதை 48 தோலா இடையுள்ள மகாஸ்நேகத்தில் சேர்த்து அதில் பசும்தயிர் தோலா 12 போட்டு கிருதபதமாகக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். வாத ஹிருதயநோய் தீரும். குறிப்பு—மஹாஸ்நேஹம் என்பது நெய், நல்லெண்ணை, வஸா, மஜ்ஜா. என்ற இந்த நான்கும் சேர்ந்து மஹாஸ்நேஹம் எனப்படும். வஸா என்பது "சுத்தமாம்ஸபவஸ்நேஹஸ் ஸாவஸேத்யபிதீயதே" என்ற வசனப்படி ஆட்டுமாமிசம் முதலியவைகளை நெருப்பில் பக்குவம் செய்துவரும் எண்ணையாகும். இதைச்சாதாரணமாகக் கொழுப்பு என்பர். மஜ்ஜா என்பது எலும்புக்குள் இருக்கும் எண்ணையாகும். இதை ஆங்கிலத்தில் Marrow என்பர். நூல்களில் இந்த நான்கும் சேர்ந்து மகாஸ்நேஹமெனக் கூறப்பட்டிருந்தபோதிலும் தற்காலம் வழக்கத்தில் நெய், நல்லெண்ணை இந்த இரண்டையும் கொண்டு இம்மருந்தைத் தயாரிக்கின்றனர். நெய், நல்லெண்ணை, வகைக்கு 24 தோலா சேர்க்க வேண்டும்.

61. அகஸ்திய ரஸாயனம்—தசமூலம், பூனைக்காலி, சங்க புஷ்பீ, பூலாங்கிழங்கு, குருந்தொட்டிவேர், யானைத்திப்பிலி, நாயுருவிவேர், தேசாவரம், கொடுவேலி, சிறுதேக்கு, புஷ்கரமூலம், வகைக்குத்தோலா 8 இடித்து ஓர் பானையில் போட்டு அதில் யவம் 256 தோலா, கடுக்காய் (முழுசாக) நூறு, சேர்த்து ஜலம் சின்னப்படி நாற்பது விட்டு நான்கில் ஒன்ருக அதாவது பத்து படியாக வற்ற வைத்து வடிகட்டி ஓர் இரும்புச் சட்டியில் கஷாயத்தைவிட்டு அந்த கடுக்காய்களையும் சேர்த்து அதில் சர்க்கரை தோலா 400, நெய், நல்லெண்ணெ, வகைக்குச் சின்னப்படி அரை சேர்த்து லேகியமாக எடுத்து அதில் திப்பிலிப்பொடி தோலா 16, தேன் சின்னப்படி அரை சேர்த்து பத்திரப்படுத்தி சரீரக்கூறுக்குதக்கபடி தினம் உபயோகித்துவரவும். ஸகல காஸங்களும் தீரும். குறிப்பு—கடுக்காய்களை நல்லதாகப்பொறுக்கி அதைத் தனியாக ஓர் துணியில் கட்டிக் கஷாய சாமான்களுடன் சேர்த்துப் பானையில் போடவும்.

62. கூச்மாண்ட ரஸாயனம்—நல்ல விளைந்த சாம்பல் பூசணிக்காய் எடுத்து மேல்தோலும் உள் விதையும் நீக்கி அதைத் தகுந்த சாதனம் கொண்டு தேங்காயைத் துருவுவதுபோலத்துருவி பிறகு அதை ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு ஜலம் விடாமல் வேகவைத்து சற்று வெந்தவுடன் எடுத்து அதைப்பிழிந்து அந்த ரசத்தைத் தனியாக வைத்துக்கொண்டு அந்த சக்கையை ஓர் இரும்புச்சட்டியிலிட்டு நெய் சின்னப்படி இரண்டு விட்டு அடுப்பேற்றி பவுன் நிறமாக வதக்கிப்பிறகு முன்வைத்திருந்த ரஸத்தைச் சேர்த்து அதில் சர்க்கரை தோலா 400 போட்டுப் பிறகு திப்பிலி, சுக்கு, வகைக்குத்தோலா நான்கு, ஜீரகம் தோலா எட்டு, திரிஜாதம், மல்லிவிதை, மிளகு, இவைவகைக்குத் தோலா இரண்டுபொடிசெய்து சேர்த்துப் பதத்தில் இறக்கி ஆறின பிறகு தேன் சின்னப்படி ஒன்று சேர்த்துக் கலந்து பத்திரப்படுத்தவும். நரை மிரல்களில் புண்களை ஆற்றும்.

63. நிதிக்திகாவலேஹம்—கண்டங்கத்திரி வேர் தோலா 400, தேசாவரம் தோலா 200, கொடுவேலி தோலா 100, தசமூலம் வகைக்குத்தோலா 10 இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு

ஜலம் சின்னப்படி 64 சேர்த்து சின்னப்படி எட்டாகவற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் சர்க்கரை தோலா 256 சேர்த்து, திப்பிலி தோலா 32, திரிஜாதகம் மொத்தம் தோலா நான்கு, மிளகு தோலா நான்கு, இவைகளைப் பொடிசெய்துபோட்டு லேகியமாகக் கிளறி இறக்கி ஆறினபிறகு தேன் சின்னப்படி அரைவிட்டு பத்திரப்படுத்தி உபயோகிக்க காஸங்கள் தீரும்.

64. விரணரோபணைக்களிம்பு—லிங்கம், ரஸம், கந்தகம், தாளகம், ரஸகர்ப்பூரம், கடுக்காய்ப்பொடி, வெள்ளைக்குங்கிலியம், ஈயச்சிந்தூரம், மிருதார்சிங்கி, பூங்காவி, காசுக்கட்டி, இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து நெய் அல்லது தேங்காய் எண்ணைவிட்டுக் குழைத்துப் புண்களின் மேலுக்குப்பூச விரணங்கள் ஆறும். குறிப்பு—ரஸம், கந்தகம், இரண்டையும் சேர்த்து முதலில் பொடிசெய்துகொள்ளவும். ரஸகர்ப்பூரமென்பது கடைச் சரக்கு. இதற்குச் சாதாரணமாகப்பூரம் என்று பெயர்.

65. தந்தரோகநிவாரணி தைலம்—நேர்வாளம், மிளகு, சங்குச்சுண்ணாம்பு, வகைக்குத்தோலா மூன்று, சாயவேர் (இதுவே நீலிவேர்என்பர்)சித்தாமுட்டிவேர், தும்பைவேர், கருங்காலிப்பட்டை, கருவேலம்பட்டை, வெள்வேலம்பட்டை, புரசம்பட்டை, எருக்கம்பட்டை, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிப்பருப்பு, வகைக்குத் தோலா ஆறு: இவைகளை இடித்துப் பொடிசெய்து ஓர் பானையில்போட்டு ஜலம் சின்னப்படி 16 விட்டு கஷாயம்செய்து இரண்டு படியாக வற்றவைத்து வடிகட்டி அதில் தேங்காய்ப்பால், நல்லெண்ணை, பொடுதலைச்சார், வகைக்குச் சின்னப்படி ஒன்று சேர்த்து சித்தரத்தை, கஸ்தூரிமஞ்சள், காசுக்கட்டி, ஓமம், வாய்விளங்கம், சுக்கு மிளகு, திப்பிலி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம், கருஞ்சீரகம், வெள்ளிலோத்திரம், தாளிசபத்திரி, வகைக்கு விராகனிடை இரண்டு பொடிசெய்து அதில் போட்டு தைலபதமாகக் காய்ச்சி வடிகட்டவும். தந்தரோகங்களில் கொப்பளிக்க நோய்தீரும். குறிப்பு—வெள்ளிலோத்திரம் என்பது ஓர் கல்வகை. சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும்.

66. மேகாரஸாயனம்—சித்தில், நாயுருவி, வாய்விளங்கம், வெள்ளைக்காக்கணட்டான், வசம்பு, கடுக்காய்த்தோல், சுக்கு, தண்ணீர்விட்டான், இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து அரைத்தோலா பொடியை பசுநெய்யில் குழைத்துச்சாப்பிட மூளைபலம் விருத்தியாகும்.

67. உபதர்சஹாரம்—வாலைரஸம் பலம் ஒன்று, ரஸகர்ப்பூரம் (இதுவே பூரமெனப்படும்) இரண்டு பலம், கந்தகம் ஒரு பலம், இந்த மூன்று வஸ்துக்களையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து கஜ்ஜலிசெய்து ஓர் கோழிமுட்டையைக் குடைந்து உள்ளிருக்கும் வஸ்துக்களை வெளிப்படுத்திவிட்டு அந்த கோழிமுட்டை ஓட்டில் முன் சொன்ன கஜ்ஜலியைச் செலுத்தி வாய்மூடி ஐந்து சீலைமண் செய்துகாயவைத்துப்பிறகுவாலுகாயந்திரத்தில்24-மணிகிரமாக்னியாக எரித்து ஆறின பிறகுஎடுத்துக்கோழிமுட்டைக்குள் இருக்கும் மருந்தை எடுத்துப் பொடிசெய்து பத்திரப்படுத்தி வயதுக்குத் தக்கபடி நான்கு குன்றிமணி யிடைவரையில் தகுந்த அநுபானத்தில் கொடுக்க மேகநோய்கள் மேகவிரணங்கள் முதலியவை தீரும்.

68 பிண்டதைலம்—மஞ்சிஷ்டி, நன்னாரி, அதிமதுரம், வெள்ளைக்குங்கிலியம், தேன்மெழுகு, இவை வகைக்குத் தோலா நான்கு இவைகளைப் பொடித்து சின்னப்படி ஒருபடி விளக்கெண்ணெயில் காய்ச்சிப்பதத்தில்வைத்துக்கொள்ளவும். வாதரக்தநோய்தீரும். குறிப்பு—இம்முறை சார்ங்கதரத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளைக் குங்கிலியத்தையும் தேன்மெழுகையும் எண்ணெய் வடித்த பிறகு போடவேண்டும். வெள்ளைக்குங்கிலயத்தைப் பொடி செய்து போடவும். மஞ்சிஷ்டி, நன்னாரி, அதிமதுரம், இந்த மூன்று சரக்குகளையும் பொடிசெய்து கல்கமாகப்போட்டு எண்ணெய்க்கு நான்குபங்கு சுத்தஜலம் விட்டு வடித்துச் சூடாக இருக்கும்போதே வெள்ளைக்குங்கிலியம் தேன் மெழுகு இரண்டையும் சேர்க்கவேண்டும். இம்முறையைப் பலர் பலவிதமாகச் செய்கின்றனர். கீழ்ச் சொன்னவிதம் நமது அநுபவமாகும்.

69. பிண்டதைலம்—ஆல், அரசு, இத்தி, அத்தி, இவைகளின் பட்டை வகைக்குத்தோலா நான்கு, நன்னாரி, குருந்தொட்டி,

அமுக்கரா வகைக்குத்தோலா 16. இவைகளை இடித்து ஓர் பானை யில் போட்டு சின்னப்படி 16 ஜலம் விட்டு எட்டில் ஒன்றாக வற்ற வைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் சிறு ஆமணக்கு எண்ணை, பசுப்பால், வகைக்கு ஒருபடி சேர்த்துப் பிறகு 15 பெலாப் பழுப்பு இலைகளை கால்படி அரிசி கழுவின நீரில் அரைத்துப் பிழிந்து அந்த ரசத்தையும் சேர்த்து அதில் மஞ்சிஷ்டி, நன்னாரி வகைக்குத்தோலா எட்டு இடித்துப் பொடிசெய்து கலந்து தைலபத மாகக்காய்ச்சி வடிகட்டவும். குறிப்பு—இம்முறை மலையாளதேசத் தில் அனுபவமாகவந்துள்ளது.

70. பிண்டதைலம்-நன்னாரி, வெள்ளைக்குங்கிலியம், மஞ்சிஷ்டி, அதிமதுரம், தேன்மெழுகு, இவை வகைக்குத் தோலா நான்கு நல்லெண்ணை சின்னப்படி ஒன்று பசுப்பால் சின்னப்படி நான்கு இவைகளைச்சேர்த்துத் தைலபதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ள வும். குறிப்பு—65பிண்டதைலத்தில்சொன்னவிதமாகவெள்ளைக்குங் கிலியம், தேன்மெழுகு, இவைகளை உபயோகிக்கவும். இது பாவப் பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

71. பிண்டதைலம்—67-ல் சொன்ன சரக்குகளை விளக் கெண்ணையில் காய்ச்சி எடுக்கவும். இது பாவப் பிரகாசத்தில் சொல் லப்பட்டிருக்கின்றது.

72. மகாபிண்ட தைலம்—நன்னாரி, வேப்பம்பட்டை, கசா கசாத்தோல், இவைகளைத் தனித்தனிச் சாம்பல்செய்து ஜலம் விட்டு கரைத்து எடுத்துத் தெளிந்தநீர் வகைக்குச் சின்னப்படி ஒன்று சீந்தில்பசுப்பால், கர்மரங்காரஸம் வகைக்குச் சின்னப்படிஒன்றுஇவை களைச்சேர்த்து அதில் காகோலி, க்ஷீரகாகோலி, ஜீவகம், மேதா, மகா மேதா, சததுப்பை, துக்திகா, மஞ்சிஷ்டி, தேன்மெழுகு, சீந்தில், நன்னாரி, வெள்ளைக்குங்கிலியம், இந்துப்பு, சந்தனம், ஆகிய இவை வகைக்குத்தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்துக்கொள்ளவும். குறிப்பு—இது பாவப் பிரகாசத்தில் சொல்லப்பட்டுள்ளது. கர்மரங்கம் என்பது ஓர் பழ விருக்ஷம்.

73. காந்தவல்லபரஸம்—ஓட்டுக்காந்தம் 16 பங்கு, அரப் பொடி 14 பங்கு, கிட்டம் 12 பங்கு, வெங்காரம், 10 பாகம், மனோ சிலை 6 பாகம், கல்மதம் 6 பாகம், இவை அனைவற்றிற்கும் சமயிடை ரஸம், ரஸத்திற்குச் சமயிடை கந்தகம் இவைகளைப் பொடிசெய்து எலுமிச்சம்பழம் ரஸத்தால் அரைத்துக் காயவைத்துக் குப்பியில் அடைத்து வாலுகா யந்திரத்தில் ஏழுநாள் எரித்து ஆறவிட்டு எடுத்துப்பொடிசெய்து நான்கு குன்றியிடை தகுந்த அனுபானத்தில் கொள்ள க்ஷயம், பாண்டு, காஸம், முதலிய நோய்கள் விலகும்.

74. வாஸாதி லேஹியம்—ஆடாதோடை வேர், தூதுவளை, கண்டங்கத்திரிவேர், நொச்சிவேர், முள்ளிவேர், வகைக்குத் தோலா 80 இடித்து 64 சின்னப்படி ஜலம் விட்டு எட்டுபடியாக வற்றவைத்து வடிகட்டி அதில் சர்க்கரை, தோலா 200 சேர்த்து அதில் ஆடாதோடை, மருதோன்றி, எருக்கு சீந்தில், சிறுகாஞ்சோரி, தூதுவளை, கரிப்பான், நொச்சி, இவைகளின் ரஸம் வகைக்குக் கால்படி விட்டு, நெய், நல்லெண்ணை வகைக்குக் கால்படி சேர்த்து அடுப்பேற்றி பாகுபதம் வரும்பொழுது சிறுதேக்கு, கர்காடகசிருங்கி வகைக்குத்தோலா எட்டு, திப்பிலி தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, சுக்கு, சடாமாஞ்சி, இந்துப்பு சதுர்ஜாதம், தாளிசபத்திரி, மிளகு, புஷ்காரமூலம், திரிபலை, வகைக் குத்தோலா நான்கு இடித்துப் பொடிசெய்து போட்டுக்கிளறி ஆறவிட்டுத்தேன் சின்னப்படி ஒன்று விட்டுக்கலந்து பத்திரப்படுத்தி வேளைக்கு அரைத்தோலா சாப்பிட சகல காஸங்களும் போம்.

75. மண்டூராதி லேகியம்—மண்டூரம், அயச்சிந்தூரம் வகைக்குத்தோலா எட்டு, மல்லிவிதை, திரிகடு, அதிமதுரம், அக்கிரகாரம், ஜீரகம், அரக்கை, சிறுதேக்கு, கோஷ்டம், சடாமாஞ்சி, தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, விளாவேர், வில்வவேர். கூகைநீர், இந்துப்பு, வெப்பாலையரிசி, லவங்கபத்திரி, கார்போகவரிசி, வகைக்குத்தோலா 20, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய்,ஜாதிபத்திரி, வால்மிளகு, வகைக்குத்தோலா 8 இவைகளை இடித்துப் பொடிசெய்து [illegible] ஓர் இரும்பு வாணையில் காடி, கரிப்பான் ரஸம், நாரத்தம்பழ ரஸம், எலுமிச்சம்பழ ரஸம், வகைக்குச் சின்

னப்படி ஒன்று சேர்த்து அதில் சர்க்கரை தோலா 1000 சேர்த்துப் பாகுவைத்து அதில் முன் பொடிகளைப்போட்டுக் கிளறி பசுநெய், தேன், வகைக்குச் சின்னப்படி 2 சேர்த்துக்கலந்து பத்திரப் படுத்தி தினம் அரைத்தோலா விதம் இருவேளை சாப்பிட்டு வர பாண்டு, காமாலை, முதலிய ரக்ததோஷங்கள் தீரும்.

76. சந்திரோதயம்—ரஸம், கந்தகம், வீரம், காடிக்காரம் பூரம், ரஸ சிந்தூரம், வகைக்குத்தோலா ஒன்று, லிங்கம் தோலா ஆறு, இவைகளைச்சுத்திசெய்து (சுத்தி முறையை சித்தர் முறையில் காண்க) கல்வத்திலிட்டு பிள்ளைப்பால்விட்டு ஒரு யாமம் அரைத்து உலர்த்தி கல்கார்க் சீசாவில் பத்திரப்படுத்தி இரு குன்றி யிடை நெய்யில் கொள்ள வாதநோய் முதலியன விலகும்.

77. கரப்பான் தைலம்—இலைக்கள்ளிவேர், கொடிக்கள்ளி வேர், அவிரிவேர், இவைகளின் கஷாயம் கால்படி, அவிரிஇலைச்சார், பொடுதலைச்சார், செருப்படிச்சார், வகைக்குக் கால்படி இவை களை ஒன்றுசேர்த்து உள்ளிப்பூண்டு, வசம்பு, கந்தகம், லிங்கம், இன்பூரல், கடுக்காய், அதிமதுரம், லவங்கம், கருஞ்சீரகம், வெட் பாலையரிசி, சிகப்புச்சந்தனம். வகைக்கு விராகனிடை இரண்டு பொடிசெய்து சேர்த்து, வேப்பெண்ணை, புங்க எண்ணை, விளக் கெண்ணை, நெய், இவைகளுள் எதாவது ஒன்று ஒருபடி சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சிக் குழந்தைகளின் கரப்பானுக்கு மேனுக்கு உபயோகிக்க கரப்பான் குணமாகும்.

78. விரணக்களிம்பு—மிருதார்சிங்கி, பால்துத்தம், ரஸகர்ப் பூரம், லிங்கம், மாசக்காய், காசுக்கட்டி, தான்றித்தோல், கடுக்காய்த்தோல், கொட்டைப்பாக்கு, வகைக்குத் தோலா நான்கு. துத்தம் தோலா 8, இவைகளைக் கல்வத்திலிட்டு நான்குயாமம் அரைத்துப் பத்திரப்படுத்தவும். ஆறாத புண்களில் நல்லெண்ணையைத் தடவி அதன்மேல் இந்தப்பொடியைத் தூவி மெதுவாகச் சற்று தேய்க் கவும். இவ்விதம் தினம் நான்கு தடவை செய்யவும். தீராத விர ணங்கள் மாறும். நெருப்புப்பட்ட புண்களிலும் வெந்நீர்விழுந்து உண்டாகும் புண்களிலும் வெ... இந்தப் பொடி யை முன்போலத் தூவவேண்டும்.

திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஷை ஸபாவின் மாதாந்தக்கூட்டம் 29—3—42உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் கூடிற்று. அவ்வமயம் ஸ்ரீ P. G. கணபதிசாஸ்திரிகள் அவர்கள் தலைமை வஹித்தார்கள். ஸ்ரீ V. சுந்தரேசசாஸ்திரிகள் அவர்கள் ஆயுர்வேத சிரோமணி வைத்ய விசாரத கிரஹணீ என்பதுபற்றி வடமொழியில் ஓர் உபன்யாஸத்தை எழுதிப்படித்தார். சர்சைகள் நடந்தன. மாலை 6-மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

V. R. Subrahmania Aiyar,

காரியதர்சி.

மதுரை சுதேச வைத்திய ஸபா.

ஷை சபையின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா 1942ஹு மார்ச்சு௴ 29உ மாலை 3·30-மணிக்கு காக்காத்தோப்புத்தெரு சூரிய நாராயணசாஸ்திரியார் பாடசாலையில் ஸ்ரீ S. சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள் B.A., B.L., தலைமையில் நடைபெற்றது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து வைத்தியர்களும் அபிமானிகளும் விஜயம் செய்திருந்தனர். "மூப்பு, [illegible]" என இரண்டு உபன்யாசங்கள் நடைபெற்றன. சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று விழா இனிது முடிவுபெற்றது.

காரியதரிசி.

Registered No. M. 4018.

பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்களின்

ருதுசூல நிவாரணீ

இது சைகமூட மருந்து. கருப்பையை (கர்ப்பாசய ஒழுங்கு செய்து ஆரோக்ய நிலைமையில் வைப்பதுடன் விடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி அதிக பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்தி விடுகின மற்ற மருந்துகளால் அசாத்தியமெனத் தள்ளப்பட்ட பல நோய்களை நிவர்த்தி செய்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கின

உபயோகிக்கும்விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாலம் 1 மாத்திரை வீதம் மாத்திரையை வாயில் போகொண்டு வெந்நீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—மாக வாயு பதார்த்தம் சேராமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ 10 தபால் செலவு வேறு.

விலாசம்—**பண்டிட் நாராயணய்யங்கார்**

நெ. 2. போலீஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ணமுறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2. போலீஸ் ஸ்டேஷன்